சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் – கல்வி – விடுதிகள் – 2011–12 ஆம் ஆண்டு – சென்னை மாவட்டத்திலுள்ள விடுதிகளில் பழுது பார்ப்பு மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல் – நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகின்றது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 2) துறை

அரசு ஆணை (நிலை) எண்.28

நாள் 28.02.2011
மாசி 16, திருவள்ளுவர் ஆண்டு 2042,
படிக்கப்பட்டது:–

ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடித எண். த4/31445/10, நாள் 4.1.11 மற்றும் 7.2.2011

------

ஆணை:–

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதிதிராவிடர் நல ஆணையர் சென்னையில் இயங்கிவரும் ஆதிதிராவிடர் நல விடுதிகளில் அடிப்படை வசதிகள் / பராமரிப்பு பணிகளை மேற்கொள்வது குறித்து ஆய்வு மேற்கொள்ள ஆதிதிராவிடர் நலத் துறை அலுவலர்கள் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டு, அக்குழு சென்னை மாவட்டத்திலுள்ள விடுதிகளை ஆய்வு செய்து அளித்த அறிக்கை / மதிப்பீடுகளின் அடிப்படையில் சென்னையிலுள்ள 21 விடுதிகள் மிகவும் பழுதடைந்து, அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டிய நிலையில் இருப்பதாகவும், இவற்றை மேம்படுத்த ரூ. 657.70 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யுமாறும் அரசைக் கோரியுள்ளார்.

2) ஆதிதிராவிடர் நல ஆணையரின் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்று, இணைப்பில் உள்ள 21 ஆதிதிராவிடர் நல விடுதிகளில் பழுது பார்ப்பு / அடிப்படைவசதிகள் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள ரூ.6,57,70,000/– (ரூபாய் ஆறு கோடியே ஐம்பத்து ஏழு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

3) மேலே, பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையைப் பெற்று இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு 21 விடுதிகளில் பழுதுபார்ப்பு / அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள சென்னை, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலருக்கு ஒப்பளிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். அரசாணையில் அனுமதிக்கப்பட்ட தொகையைக் கொண்டு நடைமுறையில் உள்ள விதிமுறைகளைப் பின்பற்றி இணைப்பில் குறிப்பிட்டுள்ள 21 விடுதிகளில் பழுதுபார்ப்பு மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

4) மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

" 2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –01 ஆதி திராவிடர் நலன் – 277 கல்வி –I திட்டத்தில் சேராதது – AE – மாணவர் இல்லங்கள்"

| | |
|---|---|
| 05 02 ஏனைய சில்லறைச் செலவுகள்<br>(த.தொ.கு. 2225 01 277 AE 05 29 | ரூ. 2.70 இலட்சம் |
| 05 05 அறைகலன்<br>(த.தொ.கு. 2225 01 277 AE 05 56 | ரூ. 20.00 இலட்சம் |
| 18 02 சிறப்புப் பராமரிப்பு<br>(த.தொ.கு. 2225 01 277 AE 18 22 | ரூ.551.00 இலட்சம் |
| 24 00 பொருள்களும் வழங்கலும்<br>(த.தொ.கு. 2225 01 277 AE 24 01) | ரூ. 64.00 இலட்சம் |
| 34 02 நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள், குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(த.தொ.கு. 2225 01 277 AE 34 28 | ரூ. 20.00 இலட்சம் |
| மொத்தம் | ரூ.657.70 இலட்சம் |

5) மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் "புதுத் துணைப்பணி" குறித்த செலவினமாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலை பெறும் வரை இத்திட்டத்திற்கான ஆரம்ப செலவினத்தை எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன் பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது–1) துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவையான முன்பணம் பெற வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் நகலினையும் இணைத்து நிதி (வ.செ.பொது – 1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6) மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை மேற்கொள்ள ஆதிதிராவிடர் நல ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் அத்தொகையினை பயன்படுத்தியதற்கான பயன்பாட்டுச் சான்றினை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7) இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.50/இணைச் செயலர் (எம்.வி.எம்) / ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், நாள் 28.02.2011ல் அதன் இசைவினைப் பெற்று வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.2037 (இரண்டாயிரத்து முப்பத்து ஏழு)

(ஆளுநரின் ஆணைப்படி)

தங்க கலியபெருமாள்
அரசு செயலாளர்

பெறுநர்
ஆணையர், ஆதிதிராவிடர் நலன், சென்னை–5
மாவட்ட ஆட்சியர், சென்னை,
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், சென்னை,
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/35/1
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–35/6.
முதன்மைக் கணக்காய்வுத் தலைவர், சென்னை – 18

நகல்:–
நிதி (ஆதி(ம)பந/வ.செ.பொ II) துறை சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை.
அமைச்சர், ஆதி(ம)பந அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9
அரசு செயலரின் தனிச் செயலர், ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நலத்துறை, சென்னை –5

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

28/2/11
பிரிவு அலுவலர்
28/2/11

<u>இணைப்பு</u>

<u>அரசு ஆணை (நிலை) எண்.28, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந2) துறை, நாள் 28.2.[illegible]</u>

| வ.எ | விடுதியின் பெயர் | தங்கியிருப் போர் எண்ணிக்கை | செலவினம் ( ரூ. இலட்சத்தல் ) | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கட்டிடம் பழுது பார்ப்புப் பணிகள் | விளையாட்டுப் பொருட்களுக்கான செலவினம் | நூலகம், புத்தகங்களுக்கான செலவினம் | பாத்திரங்கள், நீராவி கொதிகலன் அமைக்க செலவினம் | துப்புரவுப் பொருட்களுக்கான செலவினம் | அறைகலன்கள், (மேசை, நாற்காலி (ம) தரைவிரிப்பான் போன்றவை) வாங்க செலவினம் | மொத்தம் |
| 1 | எம்.சி. ராஜா மாணவர் விடுதி, சைதாப்பேட்டை | 539 | 101.50 | 2.00 | 2.50 | – | 0.40 | 3.00 | 109.40 |
| 2 | எம்.சி. ராஜா மாணவர் விடுதி, சைதாப்பேட்டை (Annex) | 55 | | | | | | | |
| 3 | கல்லூரி மாணவர் விடுதி, நந்தனம் | 275 | 97.00 | 1.50 | 2.00 | 5.00 | 0.30 | 2.00 | 107.80 |
| 4 | கல்லூரி மாணவர் விடுதி, கோடம்பாக்கம் | 275 | 68.00 | 1.50 | 2.00 | 5.00 | 0.30 | 2.00 | 78.80 |
| 5 | கல்லூரி மாணவர் விடுதி, கோடம்பாக்கம் (Annex) | 110 | | | | | | | |
| 6 | பெரம்பூர் கல்லூரி மாணவர் விடுதி, இருப்பு வில்லிவாக்கம் | 253 | 71.50 | 1.50 | 2.00 | 5.00 | 0.30 | 2.00 | 82.30 |
| 7 | கல்லூரி மாணவர் விடுதி, வில்லிவாக்கம் | 55 | | | | | | | |
| 8 | கல்லூரி மாணவியர் விடுதி, இராயபுரம் | 110 | | | | | | | |
| 9 | கல்லூரி மாணவியர் விடுதி, இராயபுரம் (Annex I) | 110 | 75.00 | 1.00 | 2.00 | 5.00 | 0.30 | 2.00 | 10.30 |
| 10 | கல்லூரி மாணவியர் விடுதி, இராயபுரம் (Annex II) | 55 | | | | | | | |
| 11 | முதுகலை பட்டதாரி மாணவியர் விடுதி, இராயபுரம் | 55 | | | | | | | |
| 12 | முதுகலை பட்டதாரி மாணவியர் விடுதி, இராயபுரம் (Annex) | 55 | | 1.00 | 2.00 | 5.00 | 0.20 | 1.50 | 84.70 |
| 13 | கீழ்ப்பாக்கம் மாணவியர் விடுதி, இருப்பு இராயபுரம் | 13 | | | | | | | |
| 14 | மாணவியர் விடுதி இராயபுரம் | 13 | | 0.50 | 1.00 | 5.00 | 0.10 | 0.75 | 7.35 |
| 15 | ஐ.டி.ஐ மாணவியர் விடுதி இராயபுரம் | 55 | | 1.00 | 2.00 | 5.00 | 0.10 | 1.50 | 9.60 |
| 16 | முதுகலைப் பட்டதாரி மாணவர் விடுதி, இராயபுரம் | 110 | 60.00 | 1.00 | 2.00 | 5.00 | 0.30 | 2.50 | 71.30 |
| 17 | மாணவர் விடுதி இராயபுரம் | 49 | | | | | | | |
| 18 | இராஜா அண்ணாமலைபுரம் மாணவர் விடுதி, இருப்பு இராயபுரம் | இல்லை | | 0.50 | | | | | |
| 19 | வேப்பேரி ஐ.டி.ஐ மாணவர் விடுதி(இருப்பு) வில்லிவாக்கம் | 253 | 77.00 | 1.50 | 2.00 | 5.00 | 0.30 | 2.00 | 87.80 |
| 20 | ஐ.டி.ஐ மாணவர் விடுதி வில்லிவாக்கம் | 55 | | | | | | | |
| 21 | மாணவியர் விடுதி வில்லிவாக்கம் | 55 | 1.00 | 1.00 | 0.50 | 5.00 | 0.10 | 0.75 | 8.35 |
| | மொத்தம் | 2550 | 551.00 | 14.00 | 20.00 | 50.00 | 2.70 | 20.00 | 657.70 |

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

28/2/11